தென்றல் செல்வராஜ் தலைமை! மணிமாறன் தென்றல் வரவேற்புரை! எம்.அமுதபாரதி – இரா.நவநீதகிருஷ்ணன் முன்னிலை!

பொள்ளாச்சியில் கழக சட்ட திட்ட திருத்தக் குழு சார்பில் கலைஞர் பிறந்தநாள் பொதுக்கூட்டம்!

தளபதி முருகேசன் – கோவி.செழியன் – ஈரோடு இறைவன் – திப்பம்பட்டி ஆறுச்சாமி சிறப்புரை!

பொள்ளாச்சி, ஜூலை.17- முத்தமிழறிஞர் தலைவர் அவர்களின் 103வது பிறந்த நாள் விழா மற்றும் பொள்ளாச்சியில் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற செய்த பொது மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் கழக சட்ட திட்ட திருத்தக் குழு சார்பாக அதன் உறுப்பினர் தென்றல் செல்வராஜ் தலைமையில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மணிமாறன் தென்றல் வருகை தந்த அனைவரையும் வரவேற்று பேசினார்.

பொள்ளாச்சி தெற்கு நகர செயலாளர் எம்.அமுதபாரதி, வடக்கு நகர செயலாளர் இரா.நவநீதகிருஷ்ணன், வடக்கு மத்திய ஒன்றிய செயலாளர் பா.ராஜு, கிணத்துக்கடவு தெற்கு ஒன்றிய செயலாளர் சே.ஆ.துரை, கிணத்துக்கடவு மத்திய ஒன்றிய செயலாளர் அல்தாப் உசேன், ஆனைமலை எஸ்.எஸ்.யுவராஜ் ஆனைமலை மத்திய ஒன்றிய செயலாளர் எஸ்.ஆர்.அண்ணாதுரை, பெரிய நெகமம் பேரூர் கழக செயலாளர் எம்.முத்துக்குமார், வேட்டைக்காரன்புதூர் பேரூர் கழக செயலாளர் பார்த்திபன், கோட்டூர் பேரூர் கழக செயலாளர் ராமகிருஷ்ணன், நகராட்சி தலைவர் ந.சியாமளா நகராட்சி துணைத் தலைவர் எஸ்.கௌதமன், நகர துணைச் செயலாளர் ஆர்.நாச்சிமுத்து, நகர மன்ற உறுப்பினர் பி.ஏ.செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னாள் உயர்கல்வித் துறை அமைச்சர் திருவிடைமருதூர் சட்டமன்றத் உறுப்பினர் முனைவர் கோவி.செழியன், கழக இலக்கிய அணி இணை செயலாளர் ஈரோடு இறைவன், முன்னாள் தமிழ்நாடு தூய்மை நல வாரிய தலைவர் கழக ஆதிதிராவிடர் நலக் குழு இணை செயலாளர் திப்பம்பட்டி வே.ஆறுச்சாமி ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்

பொள்ளாச்சி சட்ட மன்ற உறுப்பினர் கே.நித்தியானந்தன் மற்றும் வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் குட்டி (எ) சுதாகர் ஆகியோர் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்து சிறப்புரை நிகழ்த்தினார்

தலைமை கழக பேச்சாளர்கள் ஈரோடு இளையகோபால், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தனம் தங்கதுரை, அதிரடி அல்தாப், வழக்கறிஞர் இமயவர்மன், முன்னாள், இளம் பேச்சாளர் சா.பூங்கொடி ஆகியோர் சிற்றுரை வழங்கினர்.

நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் மயூரா சுப்பிரமணியம், மாவட்ட பொருளாளர் ஜெயபிரகாஷ், கழக செய்தி தொடர்பு துணைச் செயலாளர் பொள்ளாச்சி சித்திக் தலைமை செயற்குழு உறுப்பினர் மு.க.முத்து பொதுக் குழு உறுப்பினர் ஆச்சிபட்டி பாலகிருஷ்ணன், நகர துணை செயலாளர் தர்மராஜ், நகர துணை செயலாளர் பாத்திமா அக்பர், நகர பொருளாளர் ஆகிமூர்த்தி, மாவட்ட பிரதிநிதி இரும்பு சுப்பிரமணியம், மாவட்ட பிரதிநிதி ஸ்வீட் நாகராஜ்,

மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் பிரபாகரன், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் சே.கு.பாலச்சந்தர், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சுரேஷ், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் கவிதா, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் திருமலைராஜா, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சபரி கிருஷ்ணன், மாவட்ட ஆதிராவிடர் நலக்குழு அணை தலைவர் சீராபாளையம் செந்தில், மாவட்ட பிரதிநிதிகள் செம்மேடு டி நாகராஜ், சேத்துமடை இளங்கோ, மாவட்ட மகளிர் அணி செல்வி, மாவட்ட தொண்டரணி தலைவர் கராத்தே ராஜா, மாவட்ட தொண்டர் அணி துணைத் தலைவர் ஆட்சிபட்டி சுரேஷ்குமார் நகர மன்ற உறுப்பினர்கள் மாணிக்கராஜ் கவிதா, டேஸ்டி பாலு சு.தங்கவேல், விஜயா காயத்ரி, சண்முகப்பிரியா, கனகராஜ் கீதா, சிவசாமி உமா மகேஸ்வரி

மாவட்ட நிர்வாகிகள் ஆர்.மகேந்திரன் தனபாலகிருஷ்ணன் அவினேஷ் கார்த்திக் ஆ சதீஷ் எம் வீரப்பன் ஷாநவாஸ், கமலக்கண்ணன், கே.வி.ஆறுமுகம், ராஜபெருந்தகை, குரும்பை கனகு, குமார் ராஜ், நகை வெள்ளிங்கிரி, பேங்க் தங்கராஜ், முனிசிபாலிட்டி, சண்முகசுந்தரம், பேங்க் விஜயன்,

வட்டக் கழக செயலாளர்கள் ஜெயச்சந்திரன் போஜராஜன் நாகேந்திரன் ஜெகதீஷ் கா. ஜெய்லாப்தீன், விஜயகுமார், அருண்கார்த்திக், கே பி மணிகண்டன், எம்.ஜெய்லாப்தீன், எஸ்.கணேசன், சி ஆறுமுகம், ரமேஷ் குமார், செந்தில்ராஜ்

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் ஆர் செல்லப்பன் எம் சுரேஷ் குமார் செந்தில்குமார் கதிர் வடிவில் மனோகரன் சார்பு அணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் வடக்கு நகர இளைஞரணி அமைப்பாளர் யுவராஜ் தெற்கு நகர இளைஞரணி அமைப்பாளர் முத்துக்குமார் துணை அமைப்பாளர்கள் ஈஸ்வரன் நபியின் சபரி முத்துவீரன் பாலமுருகன் அபூபக்கர் சித்திக் பூபதி, நகர மாணவரணி துணை அமைப்பாளர் நவநீதகிருஷ்ணன், சிட்டி டிவி உசேன், ராஜ்பிரபு, ஆட்டோ ராமு, ஆட்டோ நாகராஜ், நிஜாமுதீன், பிரவீன்குமார், பாஸ்கர், சுகாஷ்பிரபு, மணியாளன், விக்னேஷ்குமார், மரகதம், ரஞ்சித், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் கரியாம்பட்டி செல்வராஜ், வடுகை லிங்கதுரை, மலர்பாலு, கருமாபுரம் சுரேஷ், விக்னேஷ் பிரபு, சதீஷ் ஜெகநாதன், கு.மரேந்திரன், எஸ்.கௌதம், தாஸ் பிரபு, கீர்த்தி ஆனந்த், ஆர்.தினேஷ், ரா.கோகுலவாணன், சபரிதுரை, ஊத்துக்குளி அரவிந்த், பிரவீன்துரை, அபிராமி கிருபா, சுதீஷ்ராஜ், புகைப்படக் கலைஞர் போட்டோ பாபு மற்றும் பலர் கலந்து கொண்டனர். வருகை தந்த அனைவருக்கும் பொள்ளாச்சி தெற்கு நகர விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் பொறியாளர் எஸ். சரவணகுமார் நன்றி கூறினார்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 124 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நெல்லை கிழக்கு மாவட்டம் காவல்கிணறு பேருந்து நிறுத்தத்தில் அமைக்கப்பட்டுள்ள பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் முழு திரு உருவ சிலைக்கு முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி.தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.உடன், ராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி, காவல்கிணறு ஒன்றிய கவுன்சிலர் கொசிஜீன் பால், காவல்கிணறு ஊராட்சி மன்ற தலைவர் இந்திரா சம்பு மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், காவல்கிணறு காமராஜ் சிலை அமைப்பு குழு தலைவர் உறுப்பினர்கள் உட்பட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

முன்னாள் அமைச்சர் கோவி.செழியன் – காதர்பாட்சா முத்துராமலிங்கம் சிறப்புரை!

முத்தமிழறிஞர் கலைஞர் 103ஆவது பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம்!

மாவட்டச் செயலாளர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ. அறிக்கை!

தூத்துக்குடி,ஜூலை.17- முன்னாள் முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களின் 103ஆவது பிறந்த நாளை முன்னிட்டு இன்று (ஜூலை 17) தூத்துக்குடி தெற்கு மாவட்டம் ஸ்ரீவைகுண்டத்தில் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.

மாவட்ட துணைச் செயலாளர் ச.ஆறுமுகப்பெருமாள் வரவேற்புரையாற்றுகிறார். ஒன்றியச் செயலாளர்கள் பி.ஜி.ரவி, எஸ்.ஆர்.கோட்டாளம், ச.இசக்கி பாண்டியன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். பேரூர் செயலாளர் கா.சுப்புராஜ் நன்றியுரையாற்றுகிறார். இந்த கூட்டத்தில் கலைமாமணி இசையரசு டாக்டர் இறையன்பு குத்தூஸ் வழங்கும் இன்னிசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ., திமுக வர்த்தர் அணி துணைத் தலைவர் கோவி செழியன் எம்.எல்.ஏ. ராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் காதர்பாட்ஷா(எ) முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் திமுக நிர்வாகிகள் எஸ்.ஆர்.எஸ். உமரிசங்கர், சரத்பாலா, அஜிதா அக்னல், டாக்டர். செ.வெற்றிவேல், ஜெ.ஜெசி பொன்ராணி, எஸ்.எஸ்.மனோஜ், அ.பிரம்மசக்தி, க.மாடசாமி, சி.எஸ்.டி.செந்தூர்மணி, எஸ்.அருணாச்சலம், ஜெ.ஜெயக்குமார் ரூபன், ச.ஆறுமுகப்பெருமாள், ஜெ.ஜெபதங்கம் பிரேமா, வி.பி.ராமநாதன், பி.எம்.ராமஜெயம் ஆகியோர் உரையாற்றுகின்றனர். இந்த கூட்டத்தில் ஸ்ரீவைகுண்டம் தொகுதி மற்றும் மாவட்டம் முழுவதும் உள்ள மாநில மாவட்ட நிர்வாகிகள் தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள் ஒன்றிய நகர பகுதி பேரூர் செயலாளர்கள் நிர்வாகிகள் மாவட்ட அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வட்டம் வார்டு கிளை செயலாளர்கள் சார்பு அணிகளின் நிர்வாகிகள் கழக முன்னணியினர் பொதுமக்கள் திரளாக பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

பெரம்பலூர் மாவட்டம்

வேப்பூர் கிழக்கு ஒன்றியச் செயல்வீரர்கள் கூட்டம்!

மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் சிறப்புரை!

பெரம்பலூர்,ஜூலை,17- பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் கிழக்கு ஒன்றியம் சார்பில் ஒன்றிய கழக செயலாளர் அழகு. நீலமேகம் தலைமையில் ஒன்றிய செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இந்த கூட்டத்தில் மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் இரா.ப. பரமேஷ்குமார், மாநில ஆதிதிராவிடர் நலக் குழு துணை செயலாளர் பா. துரைசாமி, வேப்பூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் தி. மதியழகன், பொதுக்குழு உறுப்பினர் பட்டுச்செல்வி ராஜேந்திரன், முன்னாள் ஒன்றிய குழு தலைவர் பிரபா செல்லப்பிள்ளை, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் செ.ஆதவன், மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் அ.கருணாநிதி, மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் ஏ.எம்.கே.கரிகாலன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மா.பிரபாகரன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

த.வெ.க. ஆட்சியில் வெள்ளக்கோவில் அருகே

பெயிண்டரை நிர்வாணப்படுத்தி வீடியோ!

போலீசார் 2 பேரை கைது செய்துள்ளனர்!

திருப்பூர், ஜூலை.17- த.வெ.க. ஆட்சியில் திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் அருகே பெயிண்டரை நிர்வாணப்படுத்தி வீடியோ 2 பேரை போலீசார் கைது செய்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் பகுதியை சேர்ந்தவர் நாகராஜ் (21). திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் பகுதியில் தங்கி கூலி வேலை செய்து வருகிறார். இந்நிலையில், நாகராஜை கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு வெள்ளகோவில் போலீசார் கஞ்சா வழக்கில் கைது செய்து சிறையில் அடைத்தனர். இதனைதொடர்ந்து, ஜாமீனில் வெளி வந்த நாகராஜ், தான் கைதானத்திற்கு காங்கயம் கரூர் சாலை பகவதி பாளையத்தைச் சேர்ந்த பெயிண்டர் சந்தோஷ்குமார் தான் (வயது 18) என கூறி அவரை அவ்வப்போது மிரட்டி வந்துள்ளார். கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு நாகராஜ், சந்தோஷ்குமார் மற்றும் அவரது நண்பர் கோகுல் பிரசாத் (வயது 23) ஆகிய 3 பேரும் வீரசோழபுரம் காட்டுப்பகுதிக்கு சென்று மது அருந்தியுள்ளனர்.

அப்போது அங்கு வந்த நாகராஜின் நண்பர்களான சஞ்சய் (வயது 23) கிரி (வயது 22) ஆகியோருடன் சேர்ந்து கொண்டு சந்தோஷ்குமாரை கட்டையால் கொடூரமாக தாக்கியுள்ளனர். இதில், காயமடைந்த அவரை ஆடைகளை கழட்டி நிர்வாணப்படுத்தி அதனை செல்போனில் வீடியோ எடுத்து யாரிடம் சொல்லக்கூடாது என்று மிரட்டி யுள்ளனர். இதுகுறித்து சந்தோஷ்குமார் மற்றும் கோகுல்பிரசாத் ஆகியோர் வெள்ளகோவில் காவல் நிலையத்தில் இரண்டு நாட்களுக்கு முன்பு புகார் அளித்தனர். அதன்பேரில் போலீசார் வழக்கு பதிவுசெய்து நாகராஜ் மற்றும் சஞ்சய் ஆகியோரை கைது செய்து காங்கயம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி தாராபுரம் சிறையில் அடைத்தனர். மேலும், இவ்வழக்கில் தலைமறைவாக உள்ள கிரியை போலீசார் தேடி வருகின்றனர்.

தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட கழக அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருவுருவ படத்திற்கு தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் முன்னிலையில் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வில் அழகு சுந்தரம்,சீனித்துரை, முத்தையா,இஞ்சி இஸ்மாயில்,அழகு தமிழ்சங்கர்,ராமராஜ்,முத்து சுப்பிரமணியன்,கருப்பணன் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

மதுரை மாநகராட்சி கவுன்சிலர்கள் மீது குற்றம் சாட்டிய

அமைச்சர் நிர்மல்குமார் மீது கண்டனத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்!

மதுரை மாநகராட்சி மன்றக் கூட்டத்தில் கழக கவுன்சில் குழுத் தலைவர் ம.ஜெயராமன் வலியுறுத்தல்!

மதுரை, ஜூலை.17- மதுரை மாநகராட்சி கவுன்சிலர்கள் கூட்டம் நேற்று நடந்தது. பொறுப்பு மேயர் நாகரா ஜன் தலைமை வகித்தார். கமிஷனர் கௌரவ் குமார் முன்னிலை வகித்தார், கவுன்சிலர்கள், அதிகாரிகள், பங்கேற்றனர்.

திமுக கவுன்சில் குழு தலைவர் ஜெயராமன் பேசும் போது, “மதுரை மாநகராட்சி வரிமுறைகேடு புகாரில் கவுன்சிலர்கள் மீது தவறாக குற்றம் சாட் டப்படுகிறது. இதில் ரூ.1.20 கோடிக்கு தவறு நடந்ததும், குற்றவளிகளாக 6 பேர் மட்டுமே இருப்பதும், வரி முறைகேட்டு தொகையில் 5 பாதிக்கும் அதிகதொகை சீரமைப்பில் சரிசெய்த தும் தெரிந்துள்ளது. ஒரு வழக்கு கோர்ட்டில் இருக் கும்போது, தவறாக கவுன்சிலர்கள் மீது குற்றம்சாட்டிய அமைச்சர் நிர்மல்குமார் உள்ளிட்டோர் மீது மாநகராட்சியில் கண்டன தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

இவ்வழக்கில் திமுக கவுன்சி லர்களை சேர்ப்பதற்கு சட்டத்துறை அமைச்சரான நிர்மல்குமார் அதிகாரிகளுக்கு நெருக்கடி தந்து வருகிறார். இதில் குற்றமற்றவர் என்பதை நிரூபிக்க சுப்ரீம் கோர்ட் வரை கூட செல்வோம்” என்றார். தொடர்ந்து கவுன்சிலர் கள், கவுன்சிலர்களுக்கான வார்டு பணிக்கான ரூ.25 லட்சம் நிதியை ரூ.50 லட்ச மாக உயர்த்தித் தர கோரினர். மதுரையில் போஸ்டர் ஒட்டும்தொழிலில் உள்ள 450க்கும் அதிக குடும்பங்க ளின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு அரசு கட்டிடங்கள் தவிர்த்து, தனியார் கட்டிடங்களில் போஸ்டர்கள் ஒட்ட அனுமதிக்க கவுன்சிலர்கள் வேண்டினர்.

ஆரப்பாளையம் உள்ளிட்ட முக்கிய 5 இடங்களுடன், மேலும் 20 இடங்கள் ஒதுக்குவதாக கமிஷனர் தெரிவித்தார்.

தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க.சார்பில் பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாள் விழா!

பாவூர்சத்திரத்தில் காமராசர் சிலைக்கு மாலை அணிவிப்பு!

வே.ஜெயபாலன் தலைமை! மரு.கலை கதிரவன் எம்.எல்.ஏ.முன்னிலை!

தென்காசி.ஜூலை.17 தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 124 வது பிறந்த நாளை முன்னிட்டு, தென்காசி தெற்கு மாவட்டம் பாவூர்சத்திரத்தில் அமைந்துள்ள காமராஜர் அவர்களின் முழு திருவுருவச் சிலைக்கு தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தலைமையில், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் முன்னிலையில் தொழிலதிபர் ஆர்.கே. காளிதாசுடன் இணைந்து மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் சேசுராஜன், கீழப்பாவூர் மேற்கு ஒன்றிய செயலாளர் சீனித்துரை, தெற்கு ஒன்றிய செயலாளர் ஜே.கே.ரமேஷ், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் காவேரி சீனித்துரை, ஒன்றிய செயலாளர்கள் பொன் செல்வன், சிவகுமார், கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

சிவகங்கையில் 38 ஆண்டுகளாகச் செயல்பட்டு வந்த

அரசு அருங்காட்சியகம் திடீர் மாற்றம்!

பொதுமக்கள் ஏமாற்றம்!

சிவகங்கை .ஜூலை 17- சிவகங்கை மாவட்ட தலைநகராக சிவகங்கை கடந்த 1985 இல் அறிவிக்கப்பட்டது . .1988 ஆண்டு முதல் மாவட்ட தலைநகரமாக செயல்படத்துவங்கியது. 1988 ஆம் ஆண்டு முதல் சிவகங்கை வாரச் சந்தை ரோட்டில் வாடகை கட்டிடத்தில் அரசு அருங்காட்சியகம் செயல்பட்டு வந்தது.

இந்த அருங்காட்சியகத்தில் பல்வேறு அரிய சிலைகள், ஓவியங்கள் மாவட்டத்தை பற்றிய வரலாறுகள் ,அடங்கிய தொகுப்புகள் போன்றவை பொதுமக்கள் மாணவர் கள் சுற்றுலா பயணிகள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தது . இதை மாவட்டம் முழுவதும் மற்றும் வெளிமாவட்டங்களிலிருந்து வரும் பார்வையாளர்கள் சுற்றுலா பயணிகள், மாணவர்கள் மாவட்டத்தின் வளர்ச்சி மற்றும் மாவட்டத்தை பற்றி பல்வேறு பயனுள்ள தகவல்களை தெரிந்து கொள்ள வாய்ப்பாக அமைந்துள்ளது . இந்த அரசு அருங்காட்சியத்தில் ஓவியப்போட்டிகள் , கலை போட்டிகள் ,மற்றும் பல்வேறு பேச்சு போட்டிகள் மற்றும் பல்வேறு அரசு நிகழ்ச்சிகள் நடைபெற்று வந்தது .தற்போது 38,ஆண்டுகளாக வாடகை கட்டிடத்தில் இயங்கி வரும் அருங்காட்சியகம் மிகவும் பழமையான கட்டத்தில் இயங்கிவந்ததால் கடந்த2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் பூட்டப்பட்டு உள்ளது.

கடந்த ஒரு ஆண்டுகளாக பொதுமக்கள் யாரும் பார்வையிட அனுமதிக்கப்பட வில்லை. இதனால் அருங்காட்சியகத்தை பார்க்க வருபவர்கள் அருங்காட்சியகம் பூட்டி கிடப்பதை பார்த்து விட்டு ஏமாற்றத்துடன் திரும்பி செல்கிறார்கள். இந்த நிலையில் தற்பொழுது இந்த அரசு அருங்காட்சியகத்தை சிவகங்கை மதுரை சாலையில் உள்ள திருமாஞ்சோலை ஏனாதி சாலையில் உள்ள கிராமத்திற்கு மாற்றுவதற்கு அரசிற்கு கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது.

இவ்வாறு மாற்றப்பட்டால் சிவகங்கை நகரில் மையமான பகுதியில் அமைந்துள்ள அரசு அருங்காட்சியத்தினை எளிதாக சென்று பார்த்தது போல் பொதுமக்கள் திருமாஞ்சோலைக்கு சென்று பார்க்க முடியாது .அங்கு பஸ் வசதி குறைவு .மேலும் மாவட்ட த்தில் பல்வேறு ஊர்களிலிருந்து வருபவர்களுக்கு பல்வேறு இடையூறுகள் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. மற்ற மாவட்டங்களில் தலைநகரில் தான் அரசு அருங்காட்சியகம் இயங்கி வருகிறது. ஆனால் திருமாஞ்சோலைக்கு மாற்றப்படுவது பொதுமக்களுக்கும் , சுற்றுலா பயணிகளுக்கு மிகவும் சிரமமாக இருக்கும் .எனவே அரசு கட்டிடங்கள் சிவகங்கை நகரில் ஏராளமான கட்டிடங்கள் உள்ளது. அவற்றில் இந்த அரசு அருங்காட்சியகம் இயங்கப்பட வேண்டும் .அதற்கான முயற்சியில் மாவட்ட நிர்வாகம் ஈடுபடவேண்டும். என்று சமூக ஆர்வலர்கள், மாணவ மாணவிகள்பொதுமக் கள் மாவட்ட ஆட்சியர் மற்றும் அரசிற்க்கு கோரிக்கை விடுத்துள்ளார்கள்.